மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கேள்வியில் கடைசிப் பகுதிக்குப் பதில் அளிப்பதாக இல்லை. முன்னாலே சொல்லப்பட்டவை களுக்கெல்லாம் ஏற்கெனவே பதில் அளிக்கப்பட்டது. கனம் உறுப்பினர் அவர்கள் நேரம் கழித்து வந்தார்கள் என்று கருதுகிறேன்.

திரு. மு. ச. சிவசாமி : முந்தைய அரசாங்கத்தின் தாய்மொழிப் பற்றற்ற காரணத்தால்தான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழக அரசுக்கு நஷ்டமும் அதை விட விலைமதிக்க முடியாத பல உயிர்களின் நஷ்டமும் ஏற்பட்டது என்பதை இந்தச் சர்க்கார் அறியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினரைப் போல் கருதுகிறவர்கள் தமிழகத்தில் பலர் இருக்கிறார்கள்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : ஐயா, தாய் மொழியைக் காப் பாற்றுவதற்காக தவச் செல்வங்களான மாணவமணிகள் தங்களுடைய இன்னுயிரை நீத்திருக்கிறார்கள். இந்த வீரத் தியாகிகளுக்கு நிரந்தரமான நினைவுச் சின்னத்தை நமது அரசாங்கம் ஏற்படுத்துமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அவர்களுக்கு நிரந்தர மான நினைவுச் சின்னம் நம்முடைய இதயத்தில் அவர்களுக்கு மதிப்பான இடத்தை அளிப்பதுதான்.

THIRU K. VINAYAKAM : Apart from throwing the blame on the previous Government who exactly is responsible for this Anti-Hindi Agitation and is it a fact that, when a lot of destruction occurred in cur State, this was referred to the Hon. Chief Minister who was then the Leader of the party and the Leader said that his party was not responsible and some hooligans, some rowdies, some unsocial elements were responsible for this looting ?

THE HON. THIRU C. N. ANNADURAI : I do not know whether this supplementary question is appropriate to the main question. As a matter of fact, if the Hon. Member wants to know about myself, I was not outside, I was inside the jail at that time.

அமைச்சர்கள் சுற்றுப் பயணம்

273 வினா.—திரு. என். கிட்டப்பா : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்யும் காலங்களில் போலீஸ் பரிவாரங்கள் துணைக்கு வரவேண்டாமென சுற்றிக்கை அனுப்பப்பட் டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான நோக்கம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) & (இ) அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்யுங்காலையில், அன்னாரின் பாதுகாப்பின் பொருட்டுச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்த விவரங்களைப்பற்றி விவாதிப்பது பொதுநலனுக்கு ஏற்புடையதல்ல.

Movement of foodgrains.

*278 *Q.*—THIRU K. VINAYAKAM :
THIRU A. M. RAJA :
THIRU S. RAMACHANDRAN :
} Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the steps taken to prevent the movement of rice and paddy without permit into the neighbouring States like Andhra Pradesh, Mysore and Kerala ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாநில எல்லைகளிலுள்ள வெளியேறு வழிகள் (Exit gate) அனைத்தும் மூடப்பட்டுள்ளன. மாவட்டங்களுக்கு இடையேயும், மாநிலங்களுக்கிடையேயும் உள்ள காவல் சாவடிகளில் சோதனை போடுதல் கடுமையாக்கப்பட்டுள்ளது. லஞ்ச ஒழிப்பு

கண்காணிப்பு போலீஸ் குழு (Police vigilance cell) சிறந்த முறையில் செயலாற்றும்படிச் செய்யப்பட்டுள்ளது. லஞ்ச ஒழிப்பு நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அக்குழு முழு அளவில் பயன் படுத்தப்படும். எல்லைகளில் உள்ள காவல்சாவடிகள் திறமையுடன் பணியாற்றும்படிப் பார்த்துக் கொள்ளுமாறு கலெக்டர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போதே, விற்பனைக்காக கள்ளக்கடத்தல் நடைபெறுவதைத் தடுக்கும் நோக்கத்திற்காக பயிர் விளையும் இடங்களில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள தானிய இருப்புகளை வெளிக் கொணரவும் சிறப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கள்ளக்கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளைக் கடுமையாக்குவதற்கு கலெக்டர்கள் கூறியுள்ள சில கருத்துக்களையும் அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. கே. விநாயகம் : இப்பொழுது கூட கள்ளக் கடத்தல் மூலமாக அரிசியும் நெல்லும் கேரளத்துக்குப் போய், அங்கிருந்து சிலோனுக்குப் போகிறது என்று சொல்கிறார்களே, அது உண்மை தானா? அங்கு போகாமல் தடுத்ததின் காரணமாக எத்தனை அளவுக்குப் பிடிபட்டிருக்கிறது ஸமக்கிள்டு ரைஸ்?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கள்ளக் கடத்தலில் அரிசி சிலோனுக்குப் போவதாக கனம் உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். ஆதலால் அது குறித்து தகவல் ஏதோ அவர்களுக்குத் தெரிந்திருப்பதுபோல் தெரிகிறது. அப்படி ஏதாவது இருந்தால் அந்தத் தகவலை எங்களுக்குத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. எம். ராஜா : அனுப்பப்படுகிற அரிசியை எடுத்துச் செல்லும் லாரி, வண்டி போன்ற வாகனங்களைப் பறிமுதல் செய்ய சட்டம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இம்மாதிரியான கள்ளக் கடத்தலுக்காக ஏற்றிக் கொண்டு போகிற லாரி, மோட்டார் வாகனங்கள் மற்றவைகளைப் பறிமுதல் செய்வதற்கும், அது மட்டுமல்லாமல் குறைந்த அளவு கள்ளக்கடத்தல்காரர்களுக்குச் சிறை தண்டனையைக் கொடுப்பதற்கும் ஏற்ற வகையில் இந்த கண்ட்ரோல் ஆர்டரில் விதி முறைகளைச் சேர்க்க வேண்டும் என்பதைப்பற்றி இந்த அரசாங்கம் தீவிரமாக ஆலோசனை செய்து வருகிறது.

THIRU S. RAMACHANDRAN : As artificial scarcity is created by such movement and as this amounts to throwing millions of people into misery, will the Government consider this and take drastic and severe action against the defaulters ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைத்தான் நான் குறிப்பிட்டேன். இது சம்பந்தமாக மேலும் ஆயுதம் தாங்கிய போலீசார்களை எல்லை ஓரங்களில் காவல் புரிவதற்கும், அங்கங்கே மாவட்ட ரீதியில் விஜிலன்ஸ் ஸெல் தலைமை நிலையங்களை அதிகரிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது. கள்ளக் கடத்தலைப்பற்றி திரு. விநாயகம் அவர்கள் சொன்னார்கள். அது சம்பந்தமாக இன்னும் கன்னியாகுமரி மாவட்ட எல்லை ஓரங்களில் ரோந்து பலப்படுத்துவதற்காக சில மின்சார விசைப் படகுகளைத் தர வேண்டுமென்று விவசாயத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டிருக்கிறேன். அப்படி யெல்லாம் ரோந்துகள் செய்யப்பட்டு வருகின்றன.

*279 *Q.*—THIRU K. VINAYAKAM :
THIRU S. J. RAMASWAMY : } Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state:—

(*a*) whether there is any proposal to send food grains to Kerala State ; and

(*b*) if so, the quantity proposed to be sent ?